**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 204 of 2024

DATE : 14.10.2025

Depositions of witness for Prosecution

PW: 9

| | | | |
|---|---|---|---|
| Name | கந்தசாமி | Caste | |
| Father/Husband's Name | செல்லையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025

**(எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு வெங்கடேஸ்வரன் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது மம்சாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2022 அன்று இரவு 20 மணிக்கு வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த பொழுது முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிறைய குற்ற எண் 156/2022 பிரிவுகள் 283, 337 IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே இரவு 21 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரதீப் மற்றும் பாண்டியன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர்

அன்றைய தினம் 22 மணிக்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கே சிகிச்சையில் இருந்த காயம்பட்ட அபி கணேசன் மற்றும் சிவா, முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

கடந்த 17.06.2022 அன்று காலை 11:45 மணிக்கு காயம்பட்ட அபி கணேசன் என்பவர் இறந்து விட்டதாக தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் வழக்கின் சட்ட பிரிவுகளை 283, 337 IP லிருந்து 283, 337 இ 304(A) IPC ஆக சட்டப்பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பிப்பேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவானது கையால் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது. அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் புகார்தாரா் முருகன் கையெழுத்து. காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வரும் பொழுது புகார்தாரருடன் வேறு யாரெல்லாம் வந்தார்கள் என்றால் வேறு யாரும் வரவில்லை. புகார் மனுவில் யாரோ நெல் மூட்டைகளை அடிக்க வைத்திருந்ததாக பொதுவாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகாரை பெற்ற பின்பு எத்தனை மணிக்கு நான் விசாரணையை தொடங்கினேன் என்றால் 22 மணிக்கு.

சம்பவயிடம் சென்று நான் பார்வையிடும் பொழுது அங்கே யாரெல்லாம் இருந்தார்கள் என்றால், அங்கே புகார்தாரரும், அபி கணேசனும் மற்றும் சிவா ஆகியோர்கள் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்யும் பொழுது சம்பவ இடத்தில் எத்தனை மேல் மூட்டைகள் இருந்தது என்று நான் கவனித்தேனா என்றால் இரவு நேரம் என்பதால் தெரியவில்லை. சம்பவ இடத்தில் நெல் மூட்டைகள் அடுக்கி

வைத்திருந்ததை காண்பிக்க போட்டோ எதுவும் நான் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நெல் மூட்டைகளை கைப்பற்றி நீதிமன்றத்தில் நான் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

விபத்து நடைபெற்று 2 நாட்கள் கழித்து புகார் மனு காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் நான் குறிப்பிட்டு விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் நாளில் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்றதா என்றால் தகவல் கிடைக்கப்பெற்றது. புகார் மனுவினை பெற்றுக்கொண்டு அபி கணேசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டை பார்வையிடாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன்.

PSO 589ன் படி விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டை பார்வையிட்ட தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடைபெற்ற சாலையின் அகலம் சுமார் 30 அடி இருக்குமா என்றால் சுமார் 20 அடி அகலம் இருக்கும். நான் முறையாக விசாரணை செய்யாமல் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் காயம்பட்டு இறந்து போன நபருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக இந்த வழக்கின் எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிக்கும் வழக்கிருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு